கணினி/6075/2020

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,
கிண்டி, சென்னை 600 032.
நாள். 19.10.2020.

## குறிப்பாணை

பொருள் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களின் கல்வித் தகுதிகளை அந்தந்த பள்ளிகளின் வழி ஆன்லைனில் பதிவு செய்தல் - அறிவுரைகள் வழங்குவது தொடர்பாக.

••••

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு வருகின்ற 23.10.2020 தேதி முதல் மதிப்பெண் சான்றிதழ்கள் அந்தந்த பள்ளிகளில் வழங்கப்பட உள்ளதாக பத்திரிக்கை செய்தி வெளியிடப்பட்டுள்ளது. எனவே, அம்மாணவர்களின் கல்வித் தகுதியை அவர்கள் பயின்ற பள்ளிகளின் வாயிலாக வேலைவாய்ப்பு இணையதளத்தில் பதிவு செய்ய அனைத்து மண்டல இணை இயக்குநர்களும் (வேலைவாய்ப்பு), தங்கள் மண்டலத்திலுள்ள சார்நிலை அலுவலர்களுக்கு, முதன்மை கல்வி அலுவலர்களுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ள உரிய அறிவுரைகள் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. பள்ளிகளுக்குரிய User ID மற்றும் Password சென்ற ஆண்டுகளில் இப்பணிக்கென வழங்கப்பட்டதையே பயன்படுத்துமாறும் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், 12ம் வகுப்பு மாணவர்களுக்கான வேலைவாய்ப்பக பதிவு பணிகளுடன் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான பதிவுகளையும் மேற்கொள்ளும் நேர்வில் நமது இணையதளம் இயங்கி வரும் சேவையகம் பாரம் தாங்காமல் பழுதாகிவிட வாய்ப்பு உள்ளதாலும், ஒரே நேரத்தில் பல மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் ஒன்று கூடுவதைத் தவிர்க்கும் பொருட்டும் 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்றோர்களுக்கான பதிவு பள்ளிகள் வாயிலாக 22.10.2020 வரை மட்டுமே மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளால் இவ்விவரத்தை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் வாயிலாக தொடர்புடைய பள்ளிகளுக்கு தெரிவித்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்நிலை அலுவலர்களுக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கான மதிப்பெண் சான்றிதழ்கள் 23.10.2020 அன்றிலிருந்து 06.11.2020 வரை பதிவுப் பணிகள் மேற்கொள்ளவிருப்பதால் அந்நாளிலிருந்து 15 நாட்கள் வரை (06.11.2020) பரிந்துரை பணிகள் மேற்கொள்ள நிறுத்தி வைக்கப்படும்.

அடுத்ததாக முந்தைய ஆண்டுகளில் பின்பற்றிய கீழ்க்கண்ட விதிமுறைகளையே இவ்வாண்டும் பின்பற்றி இப்பணியினை செவ்வனே செய்து முடிக்க உரிய அறிவுரைகளை சார்நிலை அலுவலர்களுக்கு வழங்கவும் அனைத்து மண்டல இணை இயக்குநர்களும் (வேலைவாய்ப்பு) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

01. அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு அந்தந்த பள்ளிகளிலேயே ஆன்லைன் வாயிலாக பதிவு செய்யப்பட வேண்டும்.

02. மின்தடை மற்றும் தொலைதொடர்பு துண்டிப்பு ஆகிய காரணங்களினால் பதிவுப்பணிகள் பாதிக்கப்படாத வண்ணம் மாற்று ஏற்பாடுகள் செய்து இப்பணியினை முடிக்க அனைத்து பள்ளிகளையும் கேட்டுக்கொள்ளப்படவேண்டும்.

03. அனைத்து பதிவுதாரர்களுக்கும் சான்று வழங்கப்படும் (23.10.2020) அன்றைய நாளையே அடுத்த 15 நாட்களுக்கு ஒரே பதிவு மூப்பு தேதியாக வழங்கப்படும்.

04. பள்ளிகளில் பதிவு செய்யும் அனைத்து மாணவர்களுக்கும் பள்ளியில் உள்ள அச்சிடும் இயந்திரத்தின் வாயிலாக வேலைவாய்ப்பு பதிவு அட்டை X10 பிரிண்ட் எடுத்து தர அறிவுறுத்த வேண்டும். மாணவர்களுக்கு அச்சிடப்பட்ட X10 வழங்குவதில் அலட்சியமோ, அலைகழிப்போ செய்யக்கூடாது.

05. தற்போது மாணவர்களின் ஆதார் என், மின்னஞ்சல் முகவரி மற்றும் கைபேசி எண்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் அதனை பெற்று உட்செலுத்திட வேண்டும்.

06. மாணவர்களின் குடும்ப அட்டை/ஆதார் அட்டை/பான் அட்டை/மாற்று திறனாளிகளுக்கான அடையாள அட்டை/கடவுசீட்டு ஆகியவற்றில் ஏதேனும் ஒரு ஆவணத்தை கண்டிப்பாக முகவரிக்கான அடையாள அட்டையாக கருத வேண்டும்.

07. பள்ளிகளில் மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படும் இடங்களில் வேலைவாய்ப்பு இணையதள முகவரியான https://tnvelaivaaippu.gov.in-னையும், வேலைவாய்ப்பகப் பதிவிற்கு ஆதார் எண் அளிக்கப்பட வேண்டும் என்பதையும் வேலைவாய்ப்பு பதிவு மேற்கொள்வதையும் விளம்பரப்படுத்த வேண்டும்.

08. மேற்கண்ட அறிவுரைகள் அனைத்து சார்நிலை அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்டது தொடர்பாக ஒருங்கிணைந்த அறிக்கை இயக்ககத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

09. ஒவ்வொரு அலுவலகமும் தனித்தனியே இயக்ககத்திற்கு அறிக்கை மற்றும் மின்னஞ்சல் அனுப்புவதைத் தவிர்க்குமாறும் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இக்குறிப்பாணையை பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புகையை உடன் அளிக்கப்பட வேண்டும்.

இயக்குநருக்காக

பெறுநர்
மண்டல இணை இயக்குநர்(வேலைவாய்ப்பு),
மண்டல இணை இயக்குநர் அலுவலகம்,
சென்னை / கோயம்புத்தூர் / திருச்சி / மதுரை.